DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 99/2025**

**Deposition of LW4 examined as PW3** (மகசர் சாட்சி) Dt. 06.04.2026

| | |
|---|---|
| Name | செந்தில்குமார் |
| Father's/Husband's Name | மாரிமுத்து |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | சீர்காழி |
| Age | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 06.04.2026

(A1 to A3 absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை. எங்கள் ஊரை சேர்ந்த பிரசாத் என்பவருக்கும், ரவி குடும்பத்தாருக்கும் இடையே நடந்த சம்பம் தொடர்பாக பாகசாலை போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எனது மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தை எங்கள் ஊரில் உள்ள களத்துமேட்டில் வைத்து செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்து கொடுத்த தாளில் என்ன விபரங்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதை போலீசார் என்னிடம் படித்துக் காட்டினார்களா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு பற்றிய விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு இவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை